*Journal of Sri Lanka Library Review, Volume 40, Issue I, January 2026, 63-86*
*DOI: https://doi.org/10.4038/sllr.v40i1.87*

---

# பாடசாலை நூலகக்கற்றல் வளநிலையங்களை மாணவர்கள் பயன்படுத்துவதில் எதிர்கொள்ளும் இடர்பாடுகள்: தெல்லிப்பளை கல்விக்கோட்ட பாடசாலைகளை அடிப்படையாகக் கொண்டது.

# Challenges Faced by Students in Using School Library Learning Resource Centers: A Study at Tellippalai Education Division of the Valikamam Education Zone

**Kupeshan, R.**[1]

## Abstract

This study investigates the challenges faced by General Certificate of Education Advanced Level (GCE A/L) students in utilizing library and information resource centers in 1AB schools within the Tellippalai Education Division of the Valikamam Education Zone, Jaffna District. A descriptive research design was employed, and from a population of 847 students, 247 were randomly selected using Krejcie and Morgan's sampling table. Data were collected through a structured questionnaire administered to 260 students across five school libraries, of which 247 valid responses were obtained, yielding a 95% response rate. The collected data were analyzed using SPSS software. The findings identified several major barriers in effective library use. These included school management-related factors (M = 2.88), school environment-related issues (M = 1.854), reduced student interest in learning resource centers (M = 2.403), inadequate access to information resources and electronic devices (M = 1.6453), insufficient teacher guidance (M = 3.1184), and limited effectiveness of teacher-librarian activities (M = 2.882). All mean values were associated with low standard deviations, and most significance levels were below 0.05, indicating that these challenges significantly affect students' utilization of information resource centers. The study concludes that factors related to school management, learning environment, teachers' involvement, limited availability of books and electronic resources, and students' lack of interest substantially hinder library usage. Accordingly, the study recommends that school authorities improve opportunities for library use, enhance the attractiveness of library environments, promote positive student attitudes, expand information and electronic resources, and strengthen the roles of teachers and teacher-librarians in encouraging student engagement with libraries.

**Keywords:** School Library, Student Learning, Information Resource Center, Self Learning

---

[1] Senior Assistant Librarian, University of Jaffna, Sri Lanka.

Email : kupeshan@univ.jfn.ac.lk https://orcid.id/0009-0007-0588-4799

Received: 19th Augest 2025, Accepted revised version: 27th January 2026
This work is licensed under a Creative Commons Attribution-Share Alike 4.0 International License.

**ஆய்வுச்சுருக்கம்**

இவ் ஆய்வானது யாழ்ப்பாண மாவட்டத்தின் வலிகாமம் கல்விவலயத்திற்கு உட்பட்ட தெல்லிப்பளை கல்விக்கோட்டத்தில் உள்ள 1AB பாடசாலைகளில் கல்விபயிலும் கல்விப் பொதுத்தராதர உயர்தர மாணவர்கள் நூலக மற்றும் தகவல் வளநிலையங்களை பயன்படுத்துவதில் எதிர்கொள்ளும் இடர்பாடுகளை கண்டறிவதனை நோக்கமாகக் கொண்டுள்ளது. விபரணஆய்வு முறையாக அமையும் இவ்ஆய்வானது 847 மொத்த மாணவர்களில் கிரேஷிமோகர்கன் அட்டவணையை அடிப்படையாகக் கொண்டு 247 மாணவர்களை எழுமாற்றாகத் தெரிவு செய்துபட்டனர், இதில் 52% பெண்களாவும், 48% ஆண்களாகவும் காணப்பட்டதுடன் 17- 19 வயதுக்கடையிலான கல்விப் பொதுத்தராதர உயர்தர மாணவர்களிடமிருந்து ஒழுங்கமைக்கப்பட்ட வினாக்கொத்தினை அடிப்படையாகக் கொண்டு தரவுகள் சேகரிக்கப்பட்டு SPSS Version – 26 மூலம் தரவுகள் பகுப்பாய்வு செய்யப்பட்டு முடிவுகள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. 260 மாணவர்களுக்கு கட்டமைக்கப்பட்ட வினாத்தாள் வழங்கப்பட்டது. அதில் 247 செல்லுபடியான பதில்கள் பெறப்பட்டன. இது 95% பதிலளிப்பு விகிதமாக பதிவாகியது. பாடசாலைக்கற்றல் வளநிலையத்தை பயன்படுத்துவதில் எதிர்கொள்ளும் இடர்பாடுகள் என்றவகையில் பாடசாலை முகாமைத்துவம்சார்காரணி, (சராசரி 2.88) பாடசாலைச்சூழல்சார்ந்து (சராசரி 1.854) மாணவர்களின் கற்றல்வளநிலையங்களை பயன்படுத்துவதற்கான ஆர்வம் குறைந்து காணப்படுதல் (சராசரி 2.403) மாணவர்களுக்கு போதுமான தகவல்வளங்கள் மற்றும் மின்னணுசாதனங்கள் கிடைக்காமை (சராசரி 1.6453), ஆசிரியர்களின் வழிப்படுத்தல்களின் உள்ள போதாமைகள் (சராசரி 3.1184) ஆசிரியநூலகர்களின் செயற்பாடுகள் போதாமை (சராசரி 2.882) என்றவாறு காணப்படுவதுடன் எல்லா மதிப்பாய்வுப் புள்ளிகளுமே குறைந்த நியம மட்டத்தில் காணப்படுவதுடன் பொருண்மை மட்டமும் 0.05 க்கு குறைவாகக் காணப்படுகின்றது. இவை மாணவர்களின் தகவல் வளமையங்களைப் பயன்படுத்துவதில் எதிரகொள்ளும் இடர்பாடுகளை குறிப்பிடப்படுகின்றது. இவ்வாய்வு முடிவுகளின் படி, மாணவர்கள் நூலகங்கள் மற்றும் தகவல் மையங்களைப் பயன்படுத்துவதில் பாடசாலை முகாமைத்துவத்துடன் தொடர்புடைய காரணிகள், பாடசாலைச் சூழல், ஆசிரியர்களின் செயற்பாடுகள், போதிய நூல்கள் மற்றும் இலத்திரனியல் வளங்கள், மாணவர்களின் ஆர்வக் குறைவு ஆகியவை தடைகளாக கண்டறியப்பட்டுள்ளது. முகாமைத்துவம் மாணவர்களின் நூலக மற்றும் தகவல் மையங்களின் பயன்பாட்டை அதிகரிப்பதற்கான சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக்கொடுத்தல், பாடசாலையிலும், நூலகதகவல்வளநிலையத்திலும் மாணவர்கள் விரும்பும் அல்லது கவரத்தக்க வகையில் சூழலை மாற்றியமைத்தல், நூலக பயன்பாட்டிற்கு ஏற்ப மாணவர்களின் உளநிலையில் நேர்மாற்றத்தை ஏற்படுத்தக்கூடிய நிகழ்ச்சித்திட்டங்களை முன்னெடுத்தல், பொருத்தமான தகவல் வளங்களையும், மின்னனு சாதனங்களையும் நூல் சேர்க்கையில் சேர்த்துக் கொள்ளுதல், ஆசிரியர்களும், ஆசிரிய நூலகர்களும் மாணவர்களின் நூலகப் பயன்பாட்டினை அதிகரிப்பதற்கான செயற்திட்டங்களை முன்னெடுத்தல் போன்ற பரிந்துரைகள் முன்மொழியப்பட்டுள்ளது.

**திறவுச்சொற்கள்:** பாடசாலை நூலகம், மாணவர்கற்றல், தகவல்வளமையம், சுய கற்றல்.

**1.அறிமுகம்**

இலங்கை பல நூற்றாண்டுகால கலை இலக்கிய கல்வி மற்றும் பண்பாட்டு பாரம்பரியத்தை கொண்ட நாடாகும். அந்தவகையில் இலங்கையில் நூலகத்தின் பூர்வீகம் என்பது பௌத்த விகாரைகளில் ஓலைச்சுவடிகளை பாதுகாப்பதனை அடிப்படையாகக் கொண்டே ஏற்படுத்தப்பட்டன. (Sriwarden, 1978) இலங்கையில் 1505 ஆம் ஆண்டு போர்த்துக்கீசரின் வருகையுடன் காலனித்துவக்காலம் ஆரம்பிக்கப்பட்டாலும் ஆங்கிலேயர்களே இலங்கையின் கல்வி மற்றும் நூலக அமைப்புக்களை மேம்படுத்தினார்கள். ஆரம்பகாலங்களில் அவர்களின் நோக்கம் தமது பொருளாதாரநலன்களையும்;, சமயக்கல்வியையும் அடிப்படையாகக்கொண்டிருந்தபோதும் பிற்காலத்தில் அரசபாடசாலைகளிலும், அரசநிறுவனங்களிலும் நூலகங்கள் உருவாக்குவதற்கான அடித்தளத்தை ஏற்படுத்தின. (Perera, 1991) 1948 ஆம் ஆண்டு இலங்கை சுதந்திரம் அடைந்ததைத் தொடர்ந்து இலங்கையின் கல்வி அமைச்சும், நூலகசேவைத்துறையும் இணைந்து பொதுநூலகங்களையும், பாடசாலை நூலகங்களையும் விருத்தியடையச்செய்வதற்கான தொழில்நுட்ப உதவிகளை வழங்கி இருந்தன (Yapa, 1998). 1960 ஆம் ஆண்டு தேசிய நூலக மற்றும் ஆவணவாக்கல் சபை (NLDSB) நிறுவப்பட்டதன் பின்னர்; அரசதுறைசார்ந்த நூலகங்களும், பாடசாலை நூலகங்களும் குறிப்பிடத்தக்க மாற்றம் கண்டது. 1970 களில் பாடசாலைகளில் காணப்பட்ட பாரம்பரிய நூலக எண்ணக்கருவை மாற்றி பாடசாலை நூலக கற்றல் வள மையங்கள் (SLRC) என்ற புதிய எண்ணக்கருவாக்கம் முன்வைக்கப்பட்டது. இக்காலப்பகுதியில் UNESCO மற்றும் British Council ஆகிய நிறுவனங்களின் உதவியுடன் பாடசாலை நூலகங்களை முன்நகர்த்துவதற்கான பல முன்னோடித்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. (Yapa, 1998) 1997 ஆம் ஆண்டு தொடக்கம் 2005 வரையான பொதுக்கல்வி சீர்திருத்தக்காலத்தில் கலைத்திட்ட அபிவிருத்திக்கு பாடசாலை நூலகங்களின் பங்கு மிகமுக்கியமானது என்பது வலியுறுத்தப்பட்டது. இக்காலப்பகுதியில் உலகவங்கியின் ஆதரவுடன் General Education Project 2 (GEP – 2) எனும் செயற்திட்டத்தின் மூலம் 4000 கும் மேற்பட்ட பாடசாலை நூலகங்கள் உருவாக்கப்பட்டன. அத்துடன் 1999ம் ஆண்டு தேசிய நூலக மற்றும் தகவல் அறிவியல் நிறுவனமும் (NILIS) பாடசாலை நூலகர்களுக்கு பயிற்சி வழங்கவென உருவாக்கப்பட்டது. அத்துடன் Room to Read, Save the Childran போன்ற அரசசார்பற்ற நிறுவனங்களும் பாடசாலை நூலகத்திற்கும் மாணவர்களின் வாசிப்பு விருத்திக்கும் பங்காற்றி வருகின்றன. இருந்தபோதும் அண்மைக்கால ஆய்வுகள் கிராமப்புற பாடசாலைகள் மற்றும் பொருந்;தோட்டப்பகுதிகளில் இன்னும் நூலக வசதிகள் மேம்படுத்தப்படவில்லை எனக் குறிப்பிடுகின்றன. (Caritas Srilanka, 2024) அரசாங்கத்தால் நூலக மற்றும் தகவல்மையங்களை அடிப்படையாகக் கொண்ட E-thaksalawa, Smart Classrooms போன்ற முன்னோடித்திட்டங்கள் தகவல் பகிர்வை அடிப்படையாகக் கொண்டு முன்னெடுக்கப்பட்டாலும் இன்னும் அவை முழுமையாக மாணவர்களை சென்றடையவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

**1.1 ஆய்வின் முக்கியத்துவம்**

பாடசாலை நூலக மற்றும் கற்றல்வள நிலையங்கள் என்பவை மாணவர்களின் அறிவினைப்பெருக்கும் முக்கியமான ஆதாரமாகக் காணப்படுகின்றது. எனினும் இவ்வறிவு மையங்களை மாணவர்கள் பயன்படுத்துவதில் பல்வேறு இடர்பாடுகள்; காணப்படுகின்றன.

எனவே, பின்வரும் காரணங்களால் இவ்வாய்வானது முக்கியத்துவம் உடையதாகக் காணப்படுகின்றது.

இவ்வாய்வு பல்வேறு அம்சங்களில் கல்வி மேம்பாட்டிற்கு முக்கிய பங்காற்றுகின்றது. சிறந்த நூலகப் பயன்பாடு மாணவர்களின் தனிப்பட்ட கற்றல்முறையை ஊக்குவித்து, சுயகற்றல், தகவல் தேடல் திறன் மற்றும் சிந்தனைத்திறன் ஆகியவற்றை மேம்படுத்துகிறது. மேலும், இதன் முடிவுகள் கல்வி நிர்வாகிகளுக்கும் அரசாங்க கொள்கை வகுப்பாளர்களுக்கும் பாடசாலை நூலகங்களை மேம்படுத்துவதற்கான திட்டங்கள் மற்றும் கொள்கைகளை உருவாக்குவதில் வழிகாட்டலாக பயன்படும். நூலக வளங்கள் மற்றும் தகவல் ஆதாரங்கள் கல்விச்சாதனங்களை உயர்த்துவதில் குறிப்பிடத்தக்க பங்காற்றுவதால், மாணவர்களின் பெறுபேறுகளை மேம்படுத்துவதற்கான ஆதாரமாகவும் இவ்வாய்வு அமைந்துள்ளது. அதேவேளை, கட்டமைப்பு குறைபாடுகள், பணியாளர் பற்றாக்குறை போன்ற சவால்களையும் இவ்வாய்வு வெளிக்கொணருகிறது. கல்வியில் சமவாய்ப்புகளை உறுதி செய்வதிலும் இந்த ஆய்வு முக்கியத்துவம் பெறுகிறது, ஏனெனில் நூலகவளங்களை அணுகமுடியாமை கல்வி சமத்துவத்தை பாதிக்கக்கூடியது. இவ்வாய்வு இந்த தடைகளைக் கண்டறிவதன் மூலம் அனைத்து மாணவர்களும் சமமான வாய்ப்புகளைப் பெற உதவும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**1.2 ஆய்வுப்பிரச்சனை**

தற்போதைய மாணவர்களின் கற்றல் பேறுகள் மாணவர்களின் நூற்பாவனை, இலத்திரனியல் தகவல்வளங்கள் மற்றும் இணையவழி தகவல் வளங்கள் என்பவற்றை பயன்படுத்தி தங்கள் கற்றல் அனுபவங்களை விரிவுபடுத்த வேண்டும் என்ற எதிர்பார்ப்பு காணப்படுகின்றது. எனினும் யாழ்ப்பாணமாவட்டத்தின் வலிகாமம் கல்வி வலயத்திற்குட்பட்ட தெல்லிப்பளை கல்விக்கோட்டத்தில் உள்ள 1AB பாடசாலையில் உள்ள மாணவர்கள் நூலக மற்றும் தகவல்வளமையங்களைத் தமது தேவைக்கு ஏற்ப பயன்படுத்துவதிலும் வளங்களைப் பெற்றுக்கொள்வதிலும் பல்வேறு சவால்களை எதிர்கொண்டு வருகின்றனர். அதாவது பெரும்பாலான நூலகத்தகவல்வளநிலையங்களில் மாணவர்களுக்குத் தேவையான பாடப்புத்தகங்கள் மற்றும் இலத்திரனியல் சாதனங்கள், நூல்கள், இணையவசதிகள் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலும் குறைவாகவுமே காணப்படுகின்றன. அத்துடன் மாணவர்கள் விரும்பிய நேரத்தில் பொருத்தமான சூழலில் நூலக மற்றும் தகவல்வள நிலையங்களை பயன்படுத்த முடியாது உள்ளது. இத்தகைய தடைகள் மாணவர்களின் கல்வி வளர்ச்சியை பாதிக்கும் முக்கியமான காரணியாகக் காணப்படுகின்றது. எனவே இவ்வாய்வானது இவ்வாறான தடைகள் எத்தகைய காரணிகளால் ஏற்படுகின்றன என்பதனைக் கண்டறிந்து அவற்றைத் தீர்க்கக்கூடிய செயல்முறைகளை, பரிந்துரைகளை முன்வைக்க முற்படுகின்றது.

**1.3 ஆய்வின் நோக்கங்கள்**

இவ்வாய்வானது மாணவர்கள் தமது கற்றல் தேவைகளுக்கு நூலகக்கற்றல் வளநிலையங்களை பயன்படுத்தும் நிலமை குறைவடைந்து செல்கின்றமை நடைமுறை அவதானமாகக் காணப்படுகின்றது. அவ்வகையில் யாழ்ப்பாணமாவட்டத்தின் வலிகாமம் கல்விவலயத்திலுள்;ள தெல்லிப்பளைக் கல்விக்கோட்டத்திற்குட்பட்ட 1AB பாடசாலையின்

கா.பொ.த உயர்தர மாணவர்கள் பாடசாலை நூலகக் கற்றல்வள நிலையத்தினை பயன்படுத்துவதில் எதிர்கொள்ளும் இடர்பாடுகளை கண்டறிவது இவ்வாய்வின் பிரதான நோக்கமாகும். இவ்வகையில் பின்வரும் துணைநோக்கங்களை கொண்டிருக்கின்றது.

1.தெல்லிப்பளை கல்விகோட்டத்திற்கு உட்பட்ட பாடசலைகளில் நூலக மற்றும் தகவல் வளமையங்களை மாணவர்கள் பயன்படுத்துவதில் எதிர்கொள்ளும் இடர்பாடுகளை இனங்காணுதல்.

2.மாணவர்கள் தகவல்வள நிலையங்களை பயன்படுத்துவதற்கு பொருத்தமான சூழல் நிலமைகளை மதிப்பீடு செய்தல்.

3.மாணவர்களின் கற்றல்தேவைகளை நிறைவு செய்வதற்குத் தேவையான தகவல் வளங்களின் பற்றாக்குறையை மதிப்பீடு செய்தல்.

4.நூலகத்தகவல் வளமையங்களின் நவீன இலத்திரனியல் தகவல் வளசாதனங்களின் கிடைப்பனவை மதிப்பீடு செய்தல்.

5.நூலகத் தகவல் நிலைகள் மாணவர்களின் தகவல் தேவைகளை நிறைவு செய்வதற்கான ஆசிரியர், ஆசிரிய நூலகர்களின் பங்களிப்பை மதிப்பீடு செய்தல்.

மேற்கண்ட சவால்களுக்கு தீர்வுகளை முன்வைத்து, நூலகத்தகவல்மையங்களின் செயற்பாடுகளை மாணவர்கள் பொருத்தமாக பயன்படுத்துவதற்கான மாற்றுப்பரிந்துரைகளை முன்வைப்பது போன்ற நோக்கங்களை குறிப்பாக கொண்டு இவ்வாய்வானது மேற்கொள்ளப்படுகின்றது.

**1.4 ஆய்விற்கான கருதுகோள்**

1. Ho – பாடசாலை முகாமைத்துவம் மாணவர்களின் கற்றல்வள நிலையப்பயன்பாட்டில் எந்தவொரு தடையும் ஏற்படுத்தவில்லை.

H1 – பாடசாலை முகாமைத்துவம் மாணவர்களின் நூலக மற்றும் தகவல்வள மையங்களைப் பயன்படுத்துவதில் தடைகளை ஏற்படுத்துகின்றது.

2. Ho – பாடசாலைச்சூழல் மாணவர்களின் பாடசாலைக்கற்றல் வளநிலையங்களைப் பயன்படுத்துவதில் தடைகளை ஏற்படுத்தவில்லை.

H2 – பாடசாலைச்சூழல் மாணவர்களின் பாடசாலைக்கற்றல் வளநிலையப்பயன்படுத்துவதில் தடைகளை ஏற்படுத்துகின்றது.

3. Ho – கற்றல்வள நிலையங்களைப் பயன்படுத்துவதில் மாணவர்கள் ஆர்வமாக உள்ளனர்.

H3 - கற்றல்வள நிலையங்களைப் பயன்படுத்துவதற்கான ஆர்வம் மாணவர்களிடத்தே குறைவாக காணப்படுகின்றது.

4. Ho – மாணவர்களின் விருப்பு மற்றும் தேவைகளுக்கு ஏற்ப போதுமான தகவல்வளங்கள் மற்றும் மின்னணுசாதனங்கள் கிடைக்கின்றன.

H4 – மாணவர்களின் விருப்பு மற்றும் தேவைக்கு ஏற்பபோதுமான தகவல்வளங்கள் மற்றும் மின்னணுசாதனங்கள்கிடைக்கவில்லை

5. Ho – நூலகமற்றும் தகவல்வள நிலையங்கள் மாணவர்கள் பயன்படுத்துவதற்கு போதுமான செயற்பாடுகளை ஆசிரியர்கள் மேற்கொள்ளுகின்றனர்.

H5 – நூலக மற்றும் தகவல் வளநிலையங்களை மாணவர்கள் பயன்படுத்துவதற்கு போதுமான செயற்பாடுகளை ஆசிரியர்கள் மேற்கொள்வதில்லை.

6. Ho – நூலகமற்றும் தகவல்வள மையங்களை மாணவர்கள் பயன்படுத்துவதில் ஆசிரியநூலகர்களின் செயற்பாடுகள் போதுமாக உள்ளது.

H6 – நூலகமற்றும் தகவல்வள மையங்களை மாணவர்கள் பயன்படுத்துவது தொடர்பில் ஆசிரியநூலகர்களின் செயற்பாடுகள் போதுமாகவில்லை.

**2. இலக்கிய மீளாய்வு**

பாடசாலை நூலகங்கள் என்பவை கற்றல்வள மையங்களாகவே (LRC) (Learning Resource Centre) அடையாளம் காணப்படுகின்றன. மாணவர்களில் கல்விவளர்ச்சியிலும் தனிப்பட்ட விருத்தியிலும் தவிர்க்கமுடியாத வகிபங்கினை இவ்வளநிலையங்கள் கொண்டிருக்கின்றன. பாடசாலை நூலகங்கள் மாணவர்கள் தமக்குத்தேவையான தகவல்களைப்பெற்றுக்கொள்வதற்கும், ஆய்வுத்திறன்களை வளர்த்துக்கொள்வதற்கும், மற்றும் வாழ்நாள்நீடித்த கல்வியை விருத்தி செய்துகொள்வதற்கான அடிப்படை ஆதாரமாக காணப்படுகின்றது. இத்தகைய முக்கியத்துவத்தினை இந்நூலகங்கள் கொண்டிருந்தபோதும் வினைத்திறனுடன் இந்நிலையங்களைப் பயன்படுத்துவதில் பல இடர்பாடுகளுக்கு மாணவர்கள் முகங்கொடுக்கவேண்டிய நிலமை காணப்படுகின்றது. இவ்விலக்கிய மீளாய்வானது முன்னிலை ஆய்வுகளில் இருந்து மாணவர்கள் கற்றல் வளநிலையங்களை பயன்படுத்துகையில் எதிர்கொள்ளும் இடர்பாடுகளை கண்டறிவதனையும், இவ் இடர்பாடுகளை நீக்கிக்கொள்வதற்கான தீர்வுகள் மற்றும் தந்திரோபாயங்களை முன்வைப்பதனையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

பாடசாலை நூலகத்தகவல்வள மையங்கள் மாணவர்களின் அறிவு விருத்திக்கும், சுயகற்றல் விருத்திக்கும், தகவல் அறிவை மேம்படுத்துவதற்குமான முக்கியமான மையமாக இருக்கின்றது. (Kuhlthau, 2004) இருந்தபோதும் பல்வேறு காரணங்களினால் மாணவர்கள் குறித்த நூலகத்தகவல்வள மையங்களை முழுமையாக பயன்படுத்த முடியாமல் உள்ளனர்.

**2.1 நூலகத்திற்கான இடவசதி மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளில் உள்ள மட்டுப்பாடுகள்**

பாடசாலைகளில் இன்றும் பாடசாலை நூலகங்கள் தரமான கட்டிடத்தையும், நவீன வசதிகளையும் கொண்டிருப்பதில்லை (Lor, 2002). என அறிக்கையிடப்பட்டுள்ளது. அத்துடன் நூலகத்தகவல்மையங்களுக்கான இடவசதி என்பது மிகமுக்கியமான அம்சமாக இருந்தபோதும் அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளில் நூலகங்களுக்கான மட்டுப்படுத்தப்பட்ட

இடவசதி, பழமையான தளபாடங்கள், தகவல்களை அணுகுவதற்கான மட்டுப்பாடுகள் நூலகத்தில் மாணவர்கள் கருத்தூன்றி கற்பதனைத் தடுக்கின்றது. (Kavulya, 2007) அதேபோன்று நூலகங்களில் மாணவர்கள் பயன்படுத்துவதற்கு போதுமான தளபாடங்களின்மை, வரையறுக்கப்பட்ட நேரம் என்பன நைஜPரியா இடைநிலைப்பாடசாலைகளில் தடையாவுள்ளது. (Alolabi, 2019) என குறிப்பிடுகின்றார். இலங்கையில் யாழ்மாவட்டத்தின் தென்மராட்சிக்கல்வி வலயத்தில் பாடசாலைகளின் நூலகங்களுக்கான கட்டிடங்கள் முறையாகப்பராமரிக்கப்படாமை, வாசிப்பு அறைகளுக்கான பற்றாக்குறை முக்கியபிரச்சனையாகவுள்ளது. (கேதீஸ்வரன், 2024) என சுட்டிக்காட்டியுள்ளார். இவ்வாய்வுகள் நூலகக்கற்றல் வள நிலையங்களுக்கான இடவசதி மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளில் உள்ள போதாமைகளை தெளிவாகச் சுட்டிக்காட்டுகின்றது.

**2.2 வளப்பற்றாக்குறை**

இவ்விலக்கிய மீளாய்வில் போதுமான மனித மற்றும் தகவல் வளங்களின் பற்றாக்குறை இனங்காணப்படுகின்றது. அந்தவகையில் மாணவர்களுக்கு பொருத்தமான இற்றைப்படுத்தப்பட்ட தகவல் வளங்கள் போதியளவில் கிடைக்கவில்லை. (Okiy, 2005) என்பவரின் கூற்றுப்படி இற்றைப்படுத்தப்பட்ட நூல்கள், பருவஇதழ்கள் மற்றும் எண்ணிம வளங்களின் பற்றாக்குறை மாணவர்களின் பயன்விளைவுள்ள ஆய்வுகளை மட்டுப்படுத்துகின்றது எனக்குறிப்பிடுகின்றார். அதேபோன்று அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளில் பாதீடுகளின் மூலம் பாடசாலை நூலகங்களுக்கு என ஒதுக்கப்படும் தொகையானது நிலையற்றதன்மையாகவுள்ளது என குறிப்பிடுகின்றது. (Issu et.al., 2012) மேலும் உட்படுத்தல்கல்வி முறைமைக்குள் விசேட தேவையுள்ள மாணவர்களுக்கான சமனான வாய்ப்புக்களை பாடசாலை நூலகங்களால் வழக்கமுடியவில்லை (Issu et.al., 2012) குறிப்பிட்டுள்ளார். அதேபோன்று இலங்கையின் யாழ்மாவட்டத்தின் தென்மராட்சி கல்விவலயத்தின் கிராமப்புற பாடசாலை நூலகங்கள் விருத்திசெய்யமுடியாமைக்கும், மாணவர்களை வாசிப்பதற்கு ஊக்குவிக்கமுடியாமைக்குமான காரணமாக நிதிப்பற்றாக்குறை காணப்படுகின்றது. (கேதீஸ்வரன், 2024) இதே மாதிரியான காரணங்களை (Igwe & Aliyu, 2012.) போன்றோரும் சுட்டிக்காட்டியுள்ளனர். அத்துடன் பலநூலகங்கள் திறமையற்ற, தராதரம் உள்ள நூலக சேவையாளர்களை கொண்டிருப்பதில்லை. நூலக நிர்வாக திறமையின்மை, தகவல்தொடர்பு தொழில்நுட்பங்களை பயன்படுத்தும் திறனின்மை, போன்ற காரணங்களால் இவர்களால் மாணவர்களுக்கு வழிகாட்ட முடியாமல் போகின்றது. (Alemna & Sam, 2006) அத்துடன் மாற்றுத் திறன்களைக் கொண்ட மாணவர்களுக்குத் தேவையான சேவைகள் வழங்கப்படுவதும் மிகவும் குறைவாகவே காணப்படுகின்றது எனக் கூறப்பட்டுள்ளது.

**2.3 இலத்திரனியல் மற்றும் தொழில்நுட்பவசதிகளின் பற்றாக்குறை**

நவீன கல்விச்சூழலில் மாணவர்கள் இணைய வழியில் தகவலை தேடிப்பெறுவதற்கு ஆர்வமாக உள்ளனர். ஆனால் பல பாடசாலை நூலகங்களில் கணினி, இணைய இணைப்பு, இணைய அணுகல்வசதிகள் இல்லாமையினால் தகவல்தேடல் திறனை மாணவர்களால் வளர்த்துக்கொள்ள முடியவில்லை (Williams, 2007) அதேபோன்று இலங்கையின் மட்டகளப்பு

மாவட்டத்தில் COVID – 19 நேரத்தில் பாடசாலை நூலகங்கள் இணையவழியிலான கற்றலை ஊக்குவிப்பதில் இலத்திரனியல் வளங்கள், இணையவசதிகள், ஆசிரியர் நூலகர் பற்றாக்குறை போன்றன காரணமாக இருந்துள்ளது (Ramanan & Ravikumar, 2023) எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. மேலும் யாழ்மாவட்டத்தின் வலிகாமம் கல்வி வலயத்தின் சண்டிலிப்பாய் கல்விக்கோட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் 81% மான மாணவர்களுக்கு இணையவசதி இல்லை (Nirainthini & Shanmugathasan, 2023) என குறிப்பிட்டுள்ளார்.

**2.4 மாணவர்களின் தகவல் தேடல் திறன்களில் உள்ள குறைபாடுகள்**

மாணவர்கள் மத்தியில் காணப்படுகின்ற தகவல்தேடல் திறன்களில் உள்ள குறைபாடுகள் காரணமாக நூலகங்களில் தகவல்களை தேடுவதில் மாணவர்கள்; இடர்படுகின்றனர். (Julien & Genuis, 2011) மாணவர்களுக்கு முறையான பயிற்சி மற்றும் திசைமுகப்படுத்தல் இல்லாமல் மாணவர்களால் தகவல்களை முறையாகத் தேடிப் பெற்றுக் கொள்ளுவதற்கும், அவற்றை ஒழுங்குபடுத்துவதற்கும் பயன்படுத்துவதற்கும் மாணவர்கள் இடர்படுகின்றனர். இது நூலகத்தினை சரியாக பயன்படுத்த முடியாமல் உள்ளது என்ற பதகளிப்பை மாணவர்கள் மத்தியில் உருவாக்கும் (Bostick, 2001) இந்நிலமை மாணவர்கள் நூலகத்தினை சுயமாகப் பயன்படுத்துவதற்கும், சுயமான ஆய்வுகளை மேற்கொள்வதற்கும் தடைகளை ஏற்படுத்தும் எனக் குறிப்பிடப்படுகின்றது. பல மாணவர்களுக்கு தகவலை எங்கு தேடவேண்டும், எப்படி மதிப்பீடு செய்ய வேண்டும், என்பது குறித்த தகவல் தேடல்திறனை பெறவில்லை. இதனால் நூலகத் தகவல் வளங்கள் சரியாகப் பயன்படுத்தமுடியவில்லை (Julien & Genuis, 2011).

**2.5 சமூக, பொருளாதார மற்றும் அரச கொள்கை வகுப்புக்களில் உள்ள கட்டுப்பாடுகள்.**

சமூகப் பொருளாதாரக் காரணிகள் குறிப்பாக வறுமை, பொருத்தமான கொள்கை வகுப்பின்மை என்பன நூலகப் பயன்பாட்டால் தாக்கம் செலுத்துகின்றன (Ketheeswaran, 2024). அதே போன்று பல்வேறு சமூக மற்றும் மொழி பின்புலங்களைக் கொண்ட மாணவர்களுக்கு பொருத்தமான நூல்கள் மற்றும் தகவல் வளங்கள் இல்லாமை மாணவர்களின் நூலகப் பயன்பாட்டினை தடுக்கும். அதே போன்று சில மாணவர்கள் வீட்டுப்பின்னணியில் வாசிப்புப்பழக்கத்தினை கொண்டிருப்பார்கள். சிலருக்கு குறிப்பிட்ட குடும்பப் பின்னணி இல்லாதிருக்கும். இதனால் நூலகத்தினை பயன்படுத்தும் திறனிலும் பின்தங்கியிருக்கும் சூழ்நிலை காணப்படும் (Neuman & Celano, 2001). அத்துடன் பாடசாலைச் சூழலமைவில் பாடசாலை நூலகம் என்பது துணை ஆதாரமாகக் கருதப்படுவதால் ஆசிரியர்களில் பெரும்பாலானவர்கள் மாணவர்கள் நூலகம் செல்வதனை ஊக்குவிக்காமல் உள்ளனர். (Lance & Loertscher, 2005). பாடசாலை நூலகங்கள் கற்றல் மையங்களாக செயற்பட வேண்டிய நிலையில் மாணவர்களுக்கு இடையூறு ஏற்படுத்தும் சூழ்நிலையில் நூலகம் தொழிற்படுகின்றது. இங்கு நூலக ஒழுங்கு, கட்டுப்பாடு இல்லாத நிலமை மாணவர்களை வாசிப்பிலிருந்து விலக்குகின்றது (Perera & Ranganathan, 2013). என சமூக, பொருளாதார நிலமைகள் மாணவர்களின் நூலக மற்றும் கற்றல்வளநிலையங்களில் ஏற்படுத்தும் தாக்கங்கள் விபரிக்கப்பட்டுள்ளது.

**2.6 சமூக உளப்பாங்கு மற்றும் நடத்தைசார் காரணிகள்**

மாணவர்களின் உளப்பாங்கு மற்றும் நடத்தைக் காரணிகள் மாணவர்களின் நூலகப் பாவனையில் செல்வாக்கு செலுத்துகின்றது. (Ajiboye & Tella, 2007) என்போர் நூலகம் என்பது பரீட்சைக்கு தயார்படுத்துவதற்கான மையங்கள் அவை கற்றலுக்கானதோ அல்லது பொழுதுபோக்கிற்கான மையங்கள் அல்ல என குறிப்பிட்டுள்ளார். அதே போன்று நூலகத்தில் அல்லாத பாடசாலைகளில் பணியாற்றுகின்ற உத்தியோகத்தர்களின் எதிர்மறையான சிந்தனைகள், போதிய பயிற்சியின்மை, உதவிநாடுகின்ற மாணவர்களை நிராகரிக்கின்ற தன்மை என்பனவும் மாணவர்களின் நூலகப்பாவனை குறைக்கின்றது. இது குறிப்பாக கட்டிளமைப்பருவத்தில் இருக்கின்ற மாணவர்களிடையே நூலகப்பாவனை தொடர்பாகவும் அதன் ஈடுபாடு தொடர்பாகவும் எதிர்மறையான சிந்தனைகளை தோற்றுவிக்கின்றன. (Ugah, 2008). அத்துடன் பல பாடசாலைகளில் மாணவர்களுக்கான பாடத்திட்ட நேரசூசியில் நூலகப்பயன்பாட்டிற்கான நேரம் குறைவாக இடம்பெறுகின்றது. இது மாணவர்களின் நூலகப்பாவனை தொடர்பான அழுத்தத்தை ஏற்படுத்துகின்றது. (Haycook, 2007) அத்துடன் மாணவர்கள் நூலகங்களை வெறும் புத்தகங்கள் உள்ள இடமாகவே புரிந்து கொள்கின்றனர். தகவல்தேடலுக்கான ஒரு அறிவியல் மையமாக நூலகத்தினைப் நோக்கும் பழக்கம் இல்லாததால் அதன் முழுமையான பயன்பாட்டை அடையமுடியாமல் உள்ளது (Kumar & Anudhavalli, 2007).அத்துடன் நூலகத்தின் அமைப்பு, தொகுப்பு ஏற்பாட்டுக்கள், குறியீடுகள், விசாரணை சேவைகள் ஆகியவை குறித்து மாணவர்களுக்கு முன்னறிமுகம் இல்லாததால் நூலகத்தை பயன்படுத்துவதில் பயம் அல்லது குழப்பம் ஏற்படுகின்றது. இது தொடக்கநிலை, இடைநிலை மாணவர்களுக்கு அதிகமாகக் காணப்படும். (ChanLin, et al. 2003) எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இவ் இடர்பாடும் நூலகத்திற்கான இடவசதிகள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் சார்ந்தவையாகவும், வளப்பற்றாக்குறை சார்ந்தவையாகவும், தகவல் தொழில்நுட்பவசதிகளில் காணப்படுகின்ற பற்றாக்குறை சார்பாகவும், மாணவர்களின் தகவல்திறன்களில் காணப்படுகின்ற மட்டுப்பாடுகள் சார்ந்தவையாகவும், சமூக பொருளாதார மற்றும் கொள்கைமட்டுப்பாடுகள் சார்ந்தவையாகவும், உளப்பாங்கு மற்றும் நடத்தைசார் காரணிகள் என்பவையாகவும் வகைப்படுத்தப்பட்டு நோக்கப்பட்டுள்ளது. எனவே இத்தடைகளில் இருந்து வெளிவருவதற்கான உபாயங்களாக போதிய நிதி ஒதுக்கீடுகள், ஊழியர்களுக்கான உபாயங்களாக போதிய நிதி ஒதுக்கீடுகள், ஊழியர்களுக்கான பயிற்சிகள், தகவல்தொழில்நுட்ப சாதனங்களின் ஒருங்கிணைப்பு என்பவற்றுடன் அரச கொள்கை வகுப்பாளர்களும், கல்வி நிர்வாக அதிகாரிகளும் இணைந்து நூலகத்தகவல் மையங்கள் தொடர்பான தெளிவான கொள்கைகளை தந்திரோபாய ரீதியாக உருவாக்கவேண்டும் எனவும் முன்மொழிந்துள்ளனர்.

**ஆராய்ச்சி இடைவெளி**

தெல்லிப்பளை கல்வி வலயத்தில் பள்ளி நூலகங்களின் நிலை, மாணவர்கள் நூலகத்தை எவ்வாறு பயன்படுத்துகிறார்கள், அவர்கள் சந்திக்கும் தடைகள் போன்றவற்றைச் சம்மந்தப்பட்ட நம்பத்தகுந்த தரவுகள் குறைவாக உள்ளன. இதுவரை மேற்கொள்ளப்பட்ட

ஆய்வுகள் பெரும்பாலும் நிர்வாகத் தரப்பின் பார்வையிலேயே நடைபெற்று வந்ததால், மாணவர்கள் நேரடியாக எதிர்கொள்ளும் சவால்கள் மற்றும் அனுபவங்களை பிரதிபலிக்கும் ஆய்வுகள் குறைவாகக் காணப்படுகின்றன. மேலும், நூலகப் பயன்பாட்டை மேம்படுத்துவதற்கான பயனுள்ள கொள்கைகள், திட்டங்கள், நடைமுறைச் செயல்திட்டங்கள் குறித்து ஆழமான புலனாய்வுகள் இல்லை; இலங்கையின் உள்ளூர் சூழ்நிலைக்கு ஏற்ப தீர்வுகளை முன்வைக்கும் ஆய்வுகள் இன்னும் குறைவாக உள்ளன. தற்போதைய தகவல் தொழில்நுட்ப சூழலில் டிஜிட்டல் நூலகங்கள் மற்றும் இணையவழி சேவைகள் மாணவர்களின் கற்றலுக்கு ஏற்படுத்தும் தாக்கம் தேசிய, மாகாண மட்டங்களில் போதிய அளவில் ஆய்வு செய்யப்படவில்லை. கூடுதலாக, நூலகங்களை தொடர்ந்து பயன்படுத்தும் மாணவர்களின் கல்விச் சாதனை எப்படி மேம்படுகிறது என்பதை புள்ளிவிவரங்களின் அடிப்படையில் பகுப்பாய்வு செய்யும் ஆய்வுகளும் குறைந்த நிலையில் உள்ளன.

### 3. ஆய்வு முறையியல்

இவ்வாய்வானது விபரண ஆய்வுமுறையியலில் அமைந்தது. விபரண ஆய்வு என்பது ஒரு பொருள், மக்கள் தொகை அல்லது சூழலின் குணாதிசயங்களை புள்ளிவிபரத்தோடு விபரிக்கும் ஆய்வாகும். அத்துடன் அகக்காரணிகள் எதனையும் கருத்தில் கொள்ளாது ஏன் நிகழ்கின்றது அல்லது எப்படி மாற்றுவது என்பதனை உள்ளதை உள்ளபடியே விபரிக்கும் முறையாகும். அவ்வகையில் இவ்வாய்வானது யாழ்ப்பாணம் மாவட்டத்தில் வலிகாமம் கல்விவலயத்திலுள்ள தெல்லிப்பளை கல்விக்கோட்டத்திலுள்ள 1AB பாடசாலைகளிலுள்ள நூலக மற்றும் தகவல்வள நிலையங்களினை மாணவர்கள் பயன்படுத்துவதிலுள்ள இடர்பாடுகளை கண்டறிவதனை நோக்கமாகக் கொண்டுள்ளது. அவ்வகையில் ஆய்விற்காக தெரிவு செய்யப்பட்டுள்ள பாடசாலைகள் மற்றும் அவற்றின் குடித்தொகை பரம்பல் என்பன பின்வருமாறு அமைகின்றது.

**அட்டவணை 3.1 குடித்தொகைப்பரம்பல்**

| பாடசாலை | விஞ்ஞானம் | கணிதம் | வர்த்தகம் | கலை | தொழில்நுட்பம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| யா/ மகாஜனாக்கல்லூரி | 36 | 32 | 28 | 163 | 38 | 297 |
| யா/ நடேஸ்வரக்கல்லூரி | - | 01 | 02 | 14 | - | 17 |
| யா/யூனியன் கல்லூரி | 17 | 15 | 19 | 110 | 11 | 172 |
| யா/ அருணோதயக்கல்லூரி | 19 | 20 | 08 | 121 | - | 168 |
| யா/வயாவிளான் மத்திய கல்லூரி | 07 | 24 | 21 | 141 | - | 193 |
| மொத்தம் | | | | | | 847 |

ஆதாரம் :- வலிகாமம் கல்விவலயம் (http://www.valikamamnorth.ds.gov.lk/index.php/en/schools.html)

### 3.1 தரவு சேகரிப்புமுறை

பொதுவாக விபரண ஆய்வொன்றில் தரவுகளை சேகரிப்பதற்காக கண்காணிப்பு, உற்றுநோக்கல், வினாக்கொத்து, பழையபதிவுகள், சம்பவத்திரட்டுகள் (case study) என்பன பயன்படுத்தப்படும். இவ்வாய்வில் வினாக்கொத்து, பழையபதிவுகள், சம்பவத்திரட்டுக்கள் என்பன பயன்படுத்தப்படுகின்றன.

### 3.2 ஆய்வுக்குடித்தொகையும், மாதிரியெடுப்பும்

ஆய்விற்காக தெல்லிப்பளை கல்விக்கோட்டத்திலுள்ள 1AB பாடசாலைகள் 5 தெரிவு செய்யப்பட்டன. ஒவ்வொரு பாடசாலையும் பிரதிநிதித்துவப்படுத்தும் மொத்த மாணவர்களில் கிரேசிமோர்கனின் எழுமாற்று மாதிரியின் அடிப்படையில் 265 மாணவர்கள் ஒவ்வொருபாடசாலையில் இருந்து எழுமாற்றாக தெரிவு செய்யப்பட்டனர். ஆனால் 247 வினாக்கொத்துக்களே முழுமையாக ஏற்றுக்கொள்ளக்கூடிய நிலையில் காணப்பட்டது. ஏனையவை நிராகரிக்கப்பட்டன. மாணவர்களின் குடிப்பரம்பல் தொடர்பான விபரங்களை பின்வரும் அட்டவணை புலப்படுத்துகின்றது.

### 3.3 ஆய்வுக்கான மாதிரி தொழில்நுட்பம்

தெல்லிப்பளைக் கல்விக்கோட்டத்தில் 1AB பாடசாலைகளில் கா.பொ.த உயர்தரத்தில் 847 மாணவர்கள் அனைத்துப்பிரிவுகளிலும் கல்வி கற்கின்றனர். இவர்களில் கிரேசிமோர்கனின் மாதிரி தெரிவிற்கு அமைய எழுமாற்றாக 265 மாணவர்கள் மாதிரிகளாக தெரிவு செய்யப்பட்டனர். அவர்களில் 247 பூரணப்படுத்தப்பட்ட வினாக்கொத்துக்களை மீள வழங்கியிருந்தனர்.

<table>
<tr><td rowspan="2">i ud au| n<br>z i k ħ</td><td colspan="6">_W.f .z i u./f È2023</td><td colspan="6">_W.f .z i u./f È2024</td><td rowspan="2">j ue q ħYò</td></tr>
<tr><td>Wk ¨Ĩ k °</td><td>_e ¨f ù</td><td>q ħô f _ù</td><td>_| n</td><td>z i uz f up v</td><td>WÈz f u.</td><td>Wk ¨Ĩ k °</td><td>_e ¨f ù</td><td>q ħô f _ù</td><td>_| n</td><td>z i uz f up v</td><td>WÈz f u.</td></tr>
<tr><td>k u/<br>j _ub h uí _° ‘ Ĩ</td><td>11</td><td>6</td><td>14</td><td>76</td><td>14</td><td>-</td><td>25</td><td>26</td><td>14</td><td>87</td><td>24</td><td>-</td><td>297</td></tr>
<tr><td>k u/<br>g{ d ¶ q l í _° ‘ Ĩ</td><td>-</td><td>1</td><td>2</td><td>5</td><td>-</td><td>-</td><td>-</td><td>-</td><td>-</td><td>9</td><td>-</td><td>-</td><td>17</td></tr>
<tr><td>k u/Õ h ǂk õ È_° ‘ Ĩ</td><td>9</td><td>8</td><td>6</td><td>48</td><td>11</td><td>-</td><td>8</td><td>7</td><td>13</td><td>62</td><td>--</td><td>-</td><td>172</td></tr>
<tr><td>k u/<br>S Œ{ e uf k í _° ‘ Ĩ</td><td>9</td><td>8</td><td>3</td><td>41</td><td>-</td><td>-</td><td>10</td><td>22</td><td>5</td><td>60</td><td>-</td><td>-</td><td>158</td></tr>
<tr><td>k u/q k uq ¨o uõ È<br>j ôf ¥k È_° ‘ Ĩ</td><td>5</td><td>14</td><td>12</td><td>61</td><td>5</td><td>3</td><td>2</td><td>10</td><td>4</td><td>78</td><td>2</td><td>7</td><td>203</td></tr>
<tr><td></td><td>34</td><td>37</td><td>37</td><td>231</td><td>30</td><td>03</td><td>45</td><td>65</td><td>36</td><td>296</td><td>26</td><td>7</td><td>847</td></tr>
</table>

*Tab*le 1 மாணவர்களின் குடித்தொகை பரம்பல்

### 3.4. தரவுப்பகுப்பாய்வு முறை

பூரணப்படுத்தப்பட்ட வினாக்கொத்துக்கள் மூலம் சேகரிக்கப்பட்ட தரவுகள் பகுப்பாய்விற்கு உட்படுத்தப்பட்டன. முழுமைப்படுத்தப்படாத தரவுகள் நிராகரிக்கப்பட்டிருந்தன. தரவுப்பகுப்பாய்விற்காக SPSS Version-26 புள்ளிவிபரவியல் மென்பொருள் பயன்படுத்தப்பட்டது. பகுப்பாய்வு முடிவுகள் சதவீதம் (Percentages) அடிக்கோட்டுச்சார்பு (Frequency) மற்றும் வரைபடங்கள் (Charts) என்பன பயன்படுத்தப்பட்டு முடிவுகள் வெளிப்படுத்தப்பட்டது.

**4. ஆய்வு முடிவுகளும் முன்வைப்புக்களும்**

ஆய்வில் பங்குபற்றிய மாணவர்கள் பிரதிநிதித்துவப்படுத்தும் பாடசாலைகளும் மாணவர்களின் எண்ணிக்கையும் முன்வைக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை 4.1 பாடசாலை மாணவர்களின் பிரதிநிதித்துவம்**

Table 2 பாடசாலை மாணவர்களின் பிரதிநிதித்துவம்

| பாடசாலை | எண்ணிக்கை | வீதம் % |
|---|---|---|
| யா/ அருணோதயக்கல்லூரி | 49 | 19.8% |
| யா/ மகாஜனாக்கல்லூரி | 93 | 37.7% |
| யா/ நடேஸ்வரக்கல்லூரி | 05 | 2.0% |
| யா/யூனியன் கல்லூரி | 54 | 21.9% |
| யா/வயாவிளான் மத்திய கல்லூரி | 46 | 18.6% |
| மொத்தம் | 247 | 100 |

மேற்படி அட்டவணையானது ஆய்வில் பங்குபற்றிய மாணவர்களும் அவர்களினை பிரதிநிதித்துவப்படுத்தும் பாடசாலைகளினையும் வெளிப்படத்துகின்றது. இதில் 19.8% மாணவர்கள் யா/அருனோதயாக்கல்லூரியைச் சேர்ந்தவர்களாகவும், 37.7% மான மாணவர்கள் மகாஜனாக் கல்லூரியைச் சேர்ந்தவர்களாகவும், 21.9% மான மாணவர்கள் யூனியன் கல்லூரியைச் சேர்ந்தவர்களாகவும் காணப்படுகின்றனர்.

**4.2 பாடரீதியாக மாணவர்களின் பரம்பல்**

இவ்வாய்வில் பங்குபற்றிய மாணவர்கள் பிரதிநிதித்துவப்படுத்தும் பாடப்பிரிவுகள் கீழ்வரும் அட்டவணையில் முன்வைக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை 4.2 பாடரீதியாக மாணவர்களின் பரம்பல்**

Table 3 பாடரீதியாக மாணவர்களின் பரம்பல்

| பாடங்கள் | எண்ணிக்கை | வீதம் % |
|---|---|---|
| கலைப்பிரிவு | 149 | 60.3% |
| உயிரியல் பிரிவு | 27 | 10.9% |
| வர்த்தகப்பிரிவு | 22 | 8.9% |
| கணிதப்பிரிவு | 30 | 12.1% |
| தொழில்நுட்பப்பிரிவு | 19 | 7.7% |
| மொத்தம் | 247 | 100 |

மேற்படி அட்டவணை ஆய்விற்கு தெரிவு செய்யப்பட்ட குடித்தொகை பிரதிநிதித்துவப்படுத்தும் மாணவர்களின் பாடரீதியான பரம்பலை வெளிப்படுத்துகின்றது. கலைப்பிரிவில் இருந்து 60.3% (149) மாணவர்களும், உயிரியல் பிரிவில் இருந்து 27 (10.9%) மான மாணவர்களும், வர்த்தகப்பிரிவில் இருந்த 22 (8.9%) மான மாணவர்களும், கணிதப்பிரிவில் இருந்து 30 (12.1%) மாணவர்களும், தொழில்நுட்பப்பிரிவில் இருந்து 19(7.7%) மான மாணவர்களும் பங்குபற்றியுள்ளார். அந்தவகையில் கலைப்பிரிவு மாணவர்கள் அதிகமாக பங்குபற்றியமை முடிவகள் வெளிப்படுத்துகின்றன.

**4.3 பாடசாலை நூலகம் மற்றும் கற்றல்வளநிலையத்தை மாணவர்கள் பயன்படுத்தும்போதும் எதிர்கொள்ளும் இடர்பாடுகள்.**

பாடசாலை கற்றல் வள நிலையங்களை மாணவர்கள் பயன்படுத்துவதில் எதிர்கொள்ளும் இடர்பாடுகள் தொடர்பாக முன்வைக்கப்பட்ட ஆய்வு நோக்கங்களான நூலகமற்றும் தகவல்வள மையங்களை பயன்படுத்துவதில் எதிர்கொள்ளும் இடர்பாடுகளை கண்டறிதல், தகவல்வளங்களின் பற்றாக்குறையை மதிப்பீடு செய்தல், நவீன இலத்திரனியல் தகவல்வள சாதனங்களின் கிடைப்பனவை மதிப்பீடு செய்தல், மாணவர்கள் தகவல்வளநிலையங்களை பயன்படுத்துவதற்கு பொருத்தமான சூழல் காணப்படுகின்றதா என்பதனை மதிப்பீடு செய்தல், மாணவர்ளின் தகவல் தேவைகளை நிறைவு செய்வதற்கு தேவையான ஆசிரியர்கள் மற்றும் ஆசிரிய நூலகர்களின் பங்களிப்பு என்பவை தொடர்பான மதிப்பீடுகள் கருதுகோள்கள் முன்வைக்கப்பட்டு அவை பரிசோதனை செய்வதன் ஊடாக சாதக மற்றும் பாதக நிலமைகள் கண்டறியப்படுகின்றன.

**4.4 பாடசாலை நூலக மற்றும் தகவல்வள மையங்களை பயன்படுத்துவதில் முகாமைத்துவக் காரணிகளின் பங்களிப்பு**

இக்காரணியானது வினாக்கொத்தின் மூலம் பெறப்பட்ட மாணவர்களின் தகவலுக்கு அமைய பாடசாலை முகாமைத்துவம் மாணவர்களின் நூலக மற்றும் தகவல்வள மையங்களை பயன்படுத்துவதில் எத்தகைய செல்வாக்கு செலுத்துகின்றத என்பது கருதுகோள்களின் அடிப்படையில் வாய்ப்பு பாக்கப்படுகின்றது.

| | N | Mean | Std.Deviation | Std.Error Mean |
|---|---|---|---|---|
| பாடசாலை முகாமைத்துவம்; | 247 | 2.8846 | 1.36797 | .08704 |

*Journal of Sri Lanka Library Review, Volume 40, Issue I, January 2026, 63-86*
*DOI:*

| | Test Value = 5 | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | t | df | sig.(2-tailed) | Mean Difference | Lower | Upper |
| பாடசாலை முகாமைத்துவம்; | -24.303 | 246 | .000 | -2.11538 | -2.2868 | -1.9439 |

பரிசோதனை மதிப்பு - 5 (Test Value -5)

மாறிலி – பாடசாலை முகாமைத்துவம்சார் காரணி

மெய்நிகர் சராசரி மதிப்பு – 2.8846

Ho – பாடசாலை முகாமைத்துவம் மாணவர்களின் கற்றல்வள நிலையப்பயன்பாட்டில் எந்தவொரு தடையும் ஏற்படுத்தவில்லை.

H1 – பாடசாலை முகாமைத்துவம் மாணவர்களின் நூலக மற்றும் தகவல்வள மையங்களைப் பயன்படுத்துவதில் தடைகளை ஏற்படுத்துகின்றது.

இங்கு மேற்படி அட்டவணையில் 5 என்பது கோட்பாடு ரீதியான மதிப்பெண்ணாக (Test Value) ஏற்கப்பட்டு பெறப்பட்ட முடிவுகளின் அடிப்படையில் தரவின் சராசரி மதிப்பாக 2.88 இருக்கின்றது. இங்கு பொருண்மை மட்டம் ; (P-000) என்றவாறு காணப்படுகின்றது. (P < 0.05) அதாவது 0.05 விடக்குறைவாகக் காணப்படுகின்றது. (95% நம்பகத்தன்மை) இதன் அடிப்படையில் பாடசாலையின் முகாமைத்துவம் மாணவர்களின் சார்பாக மற்றும் கற்றல் வளநிலையங்களில் தடைகளை ஏற்படுத்துகின்றது. இந்த முடிவு பாடசாலையின் முகாமைத்துவம் எனும் காரணி மாணவர்களின் நூலக மற்றும் தகவல்வள மையங்களை பயன்படுத்துவதில் தடையை ஏற்படுத்துகின்றது என்பதனை வெளிக்காட்டுகின்றது. அதாவது பாடசாலை நூலக மற்றும் தகவல்வள மையங்களை பயன்படுத்துவதற்கான சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக்கொடுக்க வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இதனால்,

H0 – பூச்சியக்கருதுகோள் நிராகரிக்கப்படுகின்றது.

H1 – மாற்றுக்கருதுகோள் ஆதரிக்கப்படுகின்றது.

4.5 மாணவர்கள் தகவல்வள நிலையங்களைப் பயன்படுத்துவதற்கான பொரத்தமான சூழல்.

மாணவர்கள் கற்றல்வள நிலையங்களை பயன்படத்துவதற்கு ஏதுவாக பொருத்தமான சூழலமைவு காணப்படுவது அவசியமாகும். இச்சூழலமைவு மாணவர்களி;ன் உளப்பாங்கில் மாற்றத்தை ஏற்படுத்தி கற்றல்வள மையங்களை பயன்படுத்துவதனை ஊக்குவிக்கும். அந்த வகையில் மாணவர்கள் தகவல்வளநிலையங்களை பயன்படுத்துவதற்கு பொருத்தமான சூழல் காணப்படுகின்றதா என்பதனை கண்டறிவதற்காக பாடசாலைச்சூழல் மாணவர்களின் பாடசாலைக்கற்றல் வளநிலையங்களைப் பயன்படுத்துவதில் தடைகளை ஏற்படுத்துகின்றது என்ற கருதுகோள் மாணவர்கள் வழங்கிய துலங்கலக்கு ஏற்ப வாய்ப்பு பார்க்கப்படுகின்றது.

| | N | Mean | Std.Deviation | Std.Error Mean |
|---|---|---|---|---|
| பாடசாலைச் சூழல்; | 247 | 1.8543 | .79888 | .05083 |

பரிசோதனை மதிப்பு – 5 (Test Value -5)

| | Test Value = 5 | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | t | df | sig.(2-tailed) | Mean Difference | Lower | Upper |
| பாடசாலைச் சூழல்; | -61.886 | 246 | .000 | -3.14575 | -3.2459 | -3.0456 |

மாறிலி – பாடசாலைச்சூழல்

மெய்நிகர் சராசரி மதிப்பு – 1.854

வளநிலையங்களைப் பயன்படுத்துவதில் தடைகளை ஏற்படுத்தவில்லை – பாடசாலைச்சூழல் மாணவர்களின் பாடசாலைக்கற்றல்.

H1 – பாடசாலைச்சூழல் மாணவர்களின் பாடசாலைக்கற்றல் வளநிலையப்பயன்படுத்துவதில் தடைகளை ஏற்படுத்துகின்றது.

மேற்படி one – Sample Test இன்படி பாடசாலைச்சூழல் என்ற மாறிலியின் சராசரி மதிப்பு 5 இல் இருந்து குறிப்பிடத்தக்களவில் குறைவாக இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. (+246) = - 61.886. அத்துடன் பொருண்மைமட்டம் (sig – 000) 0.05 விடக்குறைவாகக் காணப்படகின்றது. 95% நம்பகத்தன்மை இடைவெளி) சராசரி வித்தியாசம் -3.15 (-3.25 -3.05) இதன் அடிப்படையில் பாடசாலைச்சூழல் மாணவர்களின் கற்றல்வளநிலையப்பயன்பாட்டில் தடைகளை ஏற்படுத்துகின்றது என்ற மாற்றுக்கருதுகோள் புள்ளியியல் ரீதியாக உறுதிசெய்யப்படுகின்றது. இந்த முடிவு பாடசாலைச்சூழல் என்றும் காரணி மாணவர்களின் பாடசாலைக்கற்றல் வளநிலையப்பயன்பாட்டிற்கு பாதகமான நிலமையில் காணப்படுகின்றது என்பதனை வெளிக்காட்டுகின்றது. அதாவது மாணவர்களின் பாடசாலைக்கற்றல்வள நிலையப்பயன்பாட்டினை அதிகரிப்பதற்கு பாடசாலைசசூழலை மேம்படுத்துவது அவசியமாகக் காணப்படுகின்றத எனலாம்.

H0 – பூச்சியக்கருதுகோள் நிராகரிக்கப்படுகின்றது.

H2 – மாற்றுக்கருதுகோள் ஆதரிக்கப்படுகின்றது.

**4.6 நூலக தகவல்வளமையங்களை பயன்படுத்துவதற்கான மாணவர்களின் உளநிலமை.**

தகவல் வளநிலையங்களைப் பயன்படுத்துவதற்கு மாணவர்களுக்கு பொருத்தமான உளநிலமை காணப்படவேண்டும். இந்நிலைமையைக் கண்டறிவதற்காக மாணவர்களின்

ஆர்வம் எத்தகைய நிலமையில் காணப்படகின்றது என்பதனைக் கண்டறிவதற்காக கற்றல்வளநிலையங்களைப் பயன்படுத்துவதற்கு மாணவர்கள் ஆர்வமாக உள்ளனர் என்ற கருதுகோளை வாய்புக்களாக்குவதற்காக கொடுக்கப்பட்ட வினாக்களுக்கான மாணவர்களின் துலங்கல் பின்வருமாறு காணப்படுகின்றது.

| | N | Mean | Std.Deviation | Std.Error Mean |
|---|---|---|---|---|
| மாணவர்களின் ஆர்வம் | 247 | 2.4033 | .91361 | .05813 |

| | Test Value = 5 | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | t | df | sig.(2-tailed) | Mean Difference | Lower | Upper |
| மாணவர்களின் ஆர்வம் | -44.669 | 246 | .000 | -2.59666 | -2.7112 | -2.4822 |

பரிசோதனை மதிப்பு (Test Value -5)

மாறிலி – கற்றல்வள நிலையங்களைப் பயன்படுத்துவதற்கான மாணவர்களின் ஆர்வம்

மெய்நிகர் சராசரி மதிப்பு – 2.403

H0 – கற்றல்வள நிலையங்களைப் பயன்படுத்துவதில் மாணவர்கள் ஆர்வமாக உள்ளனர்.

H3- கற்றல்வள நிலையங்களைப் பயன்படுத்துவதற்கான ஆர்வம் மாணவர்களிடத்தே குறைவாக காணப்படுகின்றது.

மேற்படி one – Sample Test இன்படி கற்றல்வள நிலையங்களை பயன்படுத்துவதற்கான மாணவர்களின் ஆர்வம் என்ற மாறிலியின் சராசரி மதிப்பு 5 இல் இருந்து குறிப்பிடத்தக்களவு குறைவாக இருப்பது கண்டறியப்பட்டுள்ளது (2.4) = - 44.669. அத்துடன் பொருண்மைமட்டம் (Sig.000) 0.05 விடக்குறைவாகக் காணப்படுகின்றது. (95% நம்பகத்தன்மை இடைவெளி) சராசரி வித்தியாசம் - 0.2 (-2.7112 – 2.4822) இதன் அடிப்படையில், கற்றல்வள நிலையங்களைப் பயன்படுத்துவதில் மாணவர்களின் ஆர்வம் குறைவாக காணப்படுகின்றது என்ற மாற்றுக்கருத்துக் புள்ளியியல் ரீதியாக உறுதிசெய்யப்படுகின்றது. அத்துடன் எதனால் மாணவர்கள் அத்தகைய மனநிலையில் உள்ளனர் என்பதனையும் கண்டறியவேண்டிய தேவையுள்ளது. இதனால்,

H0– பூச்சியக்கருதுகோள் நிராகரிக்கப்படுகின்றது.

H3 – மாற்றுக்கருதுகோள் ஆதரிக்கப்படுகின்றது.

**4.7 தகவல்வளங்கள் மற்றும் இலத்திரனியல் தகவல் வளங்களின் கிடைப்பனவு**

மாணவர்கள் நூலகத்தகவல்வள மையங்களைப் விரும்பிப்பயன்படுத்துவதற்கு அவரகள் விரும்பகின்ற அல்லது தேவையான தகவல்வளங்கள் மற்றும் இலத்திரனியல் தகவல்வளங்கள் போதுமாக கிடைக்க வேண்டும். அவ்வாறு கிடைக்காத நிலையில் மாணவர்கள் விரும்பி அதனை பயன்படுத்தமாட்டார்கள். எனவே இக்காரணி மாணவர்கள் கற்றல்வளநிலையங்களை பயன்படுத்துவதற்கு தடைகளை ஏற்படுத்தும். இந்நிலைமையைக் கண்டறிவதற்காக மாணவர்களின் விருப்பு மற்றும் தேவைக்கு ஏற்ப போதுமான தகவல்வளங்கள் மற்றும்; இலத்திரனியல் வளங்கள் கிடைக்கின்றன என்ற கருதுகோளுக்கு மாணவர்கள் வழங்கிய துலங்கல் பின்வருமாறு காணப்படுகின்றது.

| | N | Mean | Std.Deviation | Std. Error Mean |
|---|---|---|---|---|
| மின்னணுசாதனங்கள; | 247 | 1.6453 | .76629 | .04876 |

Test Value = 5

| | t | df | sig.(2-tailed) | Mean Difference | Lower | Upper |
|---|---|---|---|---|---|---|
| மின்னணுசாதனங்கள | -68.802 | 246 | .000 | -3.35466 | -3.4507 | -3.2586 |

பரிசோதனை மதிப்பு (Test Value -5)

மாறிலி – போதுமான தகவல் வளங்கள் மற்றும் இலத்திரனியல் தகவல் வளங்களின் கிடைப்பனவு.

மெய்நிகர் சராசரி மதிப்பு – 1.6453

H0 – மாணவர்களின் விருப்பு மற்றும் தேவைகளுக்கு ஏற்ப போதுமான தகவல்வளங்கள் மற்றும் இலத்திரனியல் தகவல் வளங்கள் கிடைக்கின்றன.

H4 – மாணவர்களின் விருப்பு மற்றும் தேவைக்கு ஏற்பபோதுமான தகவல்வளங்கள் மற்றும் இலத்திரனியல் தகவல் வளங்கள் கிடைக்கவில்லை.

மேற்படி one – Sample Test இன் மாணவர்களின் விருப்பு மற்றும் தேவைக்கு ஏற்ப தகவல்வளங்கள் என்ற மாறிலியின் சராசரி மதிப்பு 5 இல் இருந்து குறிப்பிடத்தக்களவு குறைவாகக் காணப்படுவது கண்டறியப்பட்டுள்ளது. (-68.802) அத்துடன் பொருண்மை மட்டம் (P=0.000)

என்றவாறு 0.05 குறைவாகக் காணப்படுகின்றது. இதனால் பூச்சியக் கருதுகோள் நிராகரிக்கப்படுகின்றது. சராசரி மதிப்பு 1.6453 என்ற அளவில் காணப்படுவதால் மாணவர்களின் விருப்பு மற்றும் தேவைக்கு ஏற்ப போதுமான தகவல்வளங்கள் குறைவாகக் காணப்படுகின்றது. என்பது புள்ளியியல் ரீதியாக உறுதிப்படுத்தப்படுகின்றது. இந்த முடிவு மாணவர்களின் விருப்பு மற்றும் தேவைக்கு ஏற்ப தகவல் வளங்களை (Print) யும், மின்னணு வளங்களையும் பாடசாலை தகவல்வள மையங்களில் சேர்த்துக்கொள்வதோடு மாணவர்களின் சிறந்த பயன்பாட்டிற்கான உத்திகளையும் ஏற்படுத்திக் கொள்ளவேண்டும்.

H0 – பூச்சியக்கருதுகோள் நிராகரிக்கப்படுகின்றது.

H4 – மாற்றுக்கருதுகோள் ஆதரிக்கப்படுகின்றது.

**4.8 மாணவர்களின் நூலகதகவல் வளநிலையங்களின் பயன்பாட்டில் ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியநூலகர்களின் பங்களிப்பு**

மாணவர்கள் நூலக மற்றும் தகவல்வள நிலையங்களை பயன்படுத்துவதற்கு ஆசிரியர்களின் ஒத்துழைப்பும் வழிகாட்டலும் அவசியமானதாகும். ஆசிரியர் தமது கலைத்திட்டத்துடன் பாடசாலை நூலகமற்றும் கற்றல்வள நிலையங்களை இணைத்து போதுமான செயற்பாடுகளை மேற்கொள்ளும் போது மாணவர்களின் ஈடுபாடும் அதிகரிக்கும். அவ்வகையில் நூலகமற்றும் தகவல்வள நிலையங்களை ஆசிரியர்கள் மேற்கொள்ளுகின்றார்கள் என்ற கருதுகோள் தொடர்பாக மாணவர்கள் வழங்கிய துலங்கல்கள் பின்வருமாறு காணப்படுகின்றது.

| | N | Mean | Std.Deviation | Std. Error Mean |
|---|---|---|---|---|
| ஆசிரியர்களின் செயற்பாடு; | 247 | 3.1184 | 1.43274 | 0.9116 |

Test Value = 5

| | t | df | sig.(2-tailed) | Mean Difference | Lower | Upper |
|---|---|---|---|---|---|---|
| ஆசிரியர்களின் செயற்பாடு; | -20.640 | 246 | .000 | 1.88158 | -2.0611 | -1.7020 |

பரிசோதனை மதிப்பு (Test Value -5)

மாறிலி – ஆசிரியர்களின் செயற்பாடு.

மெய்நிகர் சராசரி மதிப்பாய்வு -3.1184

H0 – நூலகமற்றும் தகவல்வள நிலையங்கள் மாணவர்கள் பயன்படுத்துவதற்கு போதுமான செயற்பாடுகளை ஆசிரியர்கள் மேற்கொள்ளுகின்றனர்.

H5 – நூலக மற்றும் தகவல் வளநிலையங்களை மாணவர்கள் பயன்படுத்துவதற்கு போதுமான செயற்பாடுகளை ஆசிரியர்கள் மேற்கொள்வதில்லை.

மேற்படி one -smaple -Test இன் நூலக மற்றும் கற்றல்வளமையங்களை பயன்படுத்துவதற்கு போதுமான செயற்பாடுகளை ஆசிரியர்கள் மேற்கொள்ளுகின்றனர். என்ற மாறிலியின் சராசரி மதிப்பு 5 இல் இருந்து குறிப்பிடத்தக்களவு குறைவாகக் காணப்படுவது (-68.802) கண்டறியப்பட்டுள்ளது. அத்தடன் பொருண்மை மட்டம் (P=0.000) என்றவாறு 0.05ஐ விடக் குறைவாகக் காணப்படுகின்றது. இதனால் பூச்சியக்கருதுகோள் நிராகரிக்கப்படுகின்றது. அத்துடன் சராசரி மதிப்பு 3.1184 என்ற அளவில் காணப்படுவதனால் மாணவர்களை நூலகமற்றும் தகவல் வளநிலையங்களை பயன்படுத்துவதற்கு போதுமான செயற்பாடுகளை ஆசிரியர்கள் மேற்கொள்வது போதுமானதாக இல்லை என்பது புள்ளியியல் ரீதியாக உறுதிப்படுத்தப்படுகின்றது. இந்தமுடிவு பாடசாலை நூலக மற்றும் தகவல்வள மையங்களின் பயன்பாட்டில் ஆசிரியர்களின் செயற்பாடுகள் மற்றும் ஈடுபாடுகள் குறைவாக உள்ளதை தெளிவாகக் காட்டுகின்றது. இது மாணவர்களின் ஆர்வம் மற்றும் ஈடுபாடுகள் குறைவாக உள்ளதை தெளிவாகக் காட்டுகின்றது. இது மாணவர்களின் ஆர்வம் மற்றும் நூலகபயன்பாட்டை நேரடியாகப் பாதிக்கின்ற முக்கிய காரணியாகக் காணப்படுகின்றது. இதனால்

H0 – பூச்சியக்கருதுகோள் நிராகரிக்கப்படுகின்றது.

H5 – மாற்றுக்கருதுகோள் ஆதரிக்கப்படுகின்றது.

### 4.9 நூலக மற்றும் தகவல்வள மையங்களை பயன்படுத்துவதில் ஆசிரியநூலகர்களின் செயற்பாடுகள்.

மாணவர்கள் சிறப்பான வகையில் நூலகமற்றும் தகவல்வள நிலையங்களை பயன்படுத்துவதற்கு ஆசிரிய நூலகர்களின் செயற்பாடுகள் போதுமானவையாகக் காணப்படவேண்டும். ஆசிரியநூலகர்களின் செயற்பாடுகள் போதுமான அளவில் காணப்படவில்லையாயின் மாணவர்கள் பூரணமாக நூலகதகவல் வளநிலையங்களைப் பயன்படுத்த முடியாது. எனவே இந்நிலைமையைக் கண்டறிவதற்காக நூலகமற்றும் தகவல்வள மையங்களை மாணவர்கள் பயன்படுத்துவது தொடர்பில் ஆசிரிய நூலகர்களின் செயற்பாடுகள் போதுமான அளவி; உள்ளது என்ற கருதுகோள் தொடர்பாக மாணவர்களின் வழங்கிய துலங்கல்கள் பின்வருமாறு காணப்படுகின்றது.

| | N | Mean | Std.Deviation | Std.Error Mean |
|---|---|---|---|---|
| ஆசிரிய-நூலகர் | 247 | 2.8826 | 1.36932 | 0.08713 |

| Test Value = 5 |
|---|
| |

| | t | df | sig.(2-tailed) | Mean Difference | Lower | Upper |
|---|---|---|---|---|---|---|
| ஆசிரிய-நூலகர்; | -24.302 | 246 | .000 | -2.11741 | -2.2890 | -1.9458 |

பரிசோதனை மதிப்பு (Test Value -5)

மாறிலி – ஆசிரிய நூலகர்களின் செயற்பாடு.

மெய்நிகர் சராசரி மதிப்பாய்வு -2.8826

H0 – நூலகமற்றும் தகவல்வள மையங்களை மாணவர்கள் பயன்படுத்துவதில் ஆசிரியநூலகர்களின் செயற்பாடுகள் போதுமாக உள்ளது.

H6 – நூலகமற்றும் தகவல்வள மையங்களை மாணவர்கள் பயன்படுத்துவது தொடர்பில் ஆசிரியநூலகர்களின் செயற்பாடுகள் போதுமாகவில்லை.

மேற்படி one – Sample – Test இன் நூலக மற்றும் தகவல்வள மையங்களை மாணவரகள் பயன்படுத்துவது தொடர்பில் ஆசிரியநூலகர்களின் செயற்பாடுகள் தொடர்பான மாறிலியின் சராசரி மதிப்பு 5 இருந்து குறைவாக காணப்படுவது கண்டறியப்பட்டுள்ளது. (-24.302) அத்துடன் பொருண்மை மட்டம் (P = 0.000) என்றவாறு 0.05 விடக் குறைவாகக் காணப்படுகின்றது. இதனால் பூச்சியக்கருதுகோள் நிராகரிக்கப்படுகின்றது. சராசரி மதிப்பு 2.8826 என்ற அளவில் காணப்படுவதனால் ஆசிரிய நூலகர் மாணவர்களின் நூலகப்பயன்பாட்டை ஊக்குவிக்க தேவையான அளவிற்கு செயற்பாடுகளை மேற்கொள்ளவில்லை என்பது புள்ளயியல் ரீதியாக உறுதிப்படுத்தப்படுகின்றது. இவ்வெளிப்பாடு நூலகத்தில் வழங்கப்படும் சேவைகளுக்கும் மாணவர்களின் கல்வி வளங்களுக்கும் இடையே போதுமான இணைப்பையும் அவற்றின் மீதான மாணவர் ஈடுபாட்டை அதிகரிக்க ஆசிரிய நூலகர்கள் செயற்படவில்லை என்பது வெளிப்படுத்துகின்றது. இதனால்

H0 – பூச்சியக்கருதுகோள் நிராகரிக்கப்படுகின்றது.

H6 – மாற்றுக்கருதுகோள் ஆதரிக்கப்படுகின்றது.

இந்த முடிவுகளின்படி பாடசாலை முகாமைத்துவம் மாணவர்களின் நூலக மற்றும் தகவல் மையங்களின் பயன்பாட்டினை அதிகரிப்பதற்கான அதிக பங்களிப்பை வழங்க வேண்டும் என்பது ஆய்வில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. அதாவது தற்போது பாடசாலை முகாமைத்துவம் வழங்குகின்ற ஆதரவு போதாமல் உள்ளது என்பது வெளிப்படுகின்றது. இதனால் பாடசாலை முகாமைத்துவம் நூலக செயற்பாடுகளை அதிகரிப்பதற்கு உதவிகளை அதிகரிக்க வேண்டும். போதுமான நிதிவளங்கள் பௌதீக வளங்கள், ஆளணி வசதி என்பவற்றை ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும். அதேபோன்று பாடசாலை சூழலும் மாணவர்களின் நூலக கற்றல்வளநிலைய பயன்பாட்டில் கற்றல் செயற்பாடுகளும் முக்கிய தடையாகக் காணப்படுகின்றது. அந்த வகையில் நூலககற்றல்வள நிலையங்களை மாணவர்கள் விரும்பிப் பயன்படுத்தக்கூடிய சூழலை பாடசாலை நிர்வாகம் ஏற்படுத்த வேண்டும். குறிப்பாக மாணவர்களின் விருப்பத்திற்கு ஏற்ப நூலகத்தை பயன்படுத்தவும் விரும்பிய நேரத்தில்

பயன்படுத்தவும் பொருத்தமான தெரிவுகளை மேற்கொள்வதற்கான சூழலும் மாணவர்களுக்கு ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

பாடசாலைக் நூலக மற்றும் கற்றல்வளமையங்களை மாணவர்கள் பயன்படுத்துவதற்கான ஆர்வம் குறைவாகக் காணப்படுவதனை ஆய்வு முடிவுகள் வெளிப்படுத்தியுள்ளன. இந்த முடிவு நூலக சேவைக்கான மாணவர்களின் ஆர்வத்தை மேம்படுத்தும் திட்டங்கள் அவசியம் அதாவது மாணவர்கள் மத்தியில் நூலக பயன்பாட்டை அதிகரிக்கக்கூடிய வகையில் பாடத்திட்டங்களை ஒருங்கிணைத்தல் மற்றும் மாணவர்களுக்கு ஆர்வத்தை ஏற்படுத்தக்கூடிய வகையிலான தொழில்நுட்பவசதிகளை ஏற்படுத்திக்கொடுத்தல் மாணவர்களுக்கான செயற்திட்டங்களை முன்மொழிதல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்.

மேலும் மாணவர்களுக்குத்தேவையான இலத்திரனியல் வளங்கள் மற்றும் கற்றல் வளங்கள் போதுமாகவில்லை என்பதனை ஆய்வுமுடிவுகள் வெளிப்படுத்துகின்றன. எனவே மாணவர்களுக்கு தேவையான இலத்திரனியல் தகவல் சாதனங்களை மாணவர்கள் பெற்றுக்கொள்வதற்கு பாடசாலை நிர்வாகம் நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் அத்துடன் இலத்திரனியல் சாதனங்களை பயன்படுத்துவதற்கான பயிற்சி விருப்பும் மொழித்தகவல் சாதனங்கள் கிடைப்பதனை உறுதிசெய்தல், தகவல் வளங்களை தெரிந்து கொள்வதற்கான இலவச இணையத்தளங்களை அறிமுகம் செய்தல், மாற்று வழிகாட்டி நிகழ்ச்சிகளை மாணவர்களுக்கு நடாத்துதல் போன்ற செயற்பாடுகளை மேற்கொள்ளலாம்.

பாடசலைக் நுலக மற்றும் தகவல் வள நிலையங்களை மாணவர்கள் பயன்படுத்துவதற்கான உந்துதல்களை ஆசிரியர்கள் மேற்கொள்வதில்லை என்பதனை ஆய்வு முடிவுகள் வெளிப்படுத்துகின்றன. எனவே ஆசிரியர்கள் தமது போதனை நிகழ்ச்சித் திட்டங்களின் போது மாணவர்களுக்கு நூலகம் தொடர்பாக அறிவூட்டும் செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும். அத்துடன் ஆசிரியர்கள் தமது பாடங்களுடன் நுலகத்தை இணைந்து செயற்படக் கூடிய வகையில் போதனைகளை திட்டமிட்டுச் செயற்படுத்த வேண்டும். இதன் மூலம் மாணவர்களின் ஆர்வத்தை ஆசிரியர்களினால் ஈர்க்கக் கூடியதாக காணப்படும்.

பாடசலைக் நூலகக் கற்றல் வளங்களை மாணவர்கள் பயன்படுத்துவனை ஊக்குவிக்கும் செயற்பாடுகளில் ஆசிரிய நூலகர்கள் போதுமான செயற்பாடுளை நூலகம் சார்ந்து மேற்கொள்வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**5. ஆய்வு முடிவுகள்**

இவ்வாய்வின் மூலம் மாணவர்களின் நூலக மற்றும் தகவல்மையங்களைப் பயன்படுத்துவதில் பாடசாலை முகாமைத்துவம்சார் காரணிகள், பாடசாலை சூழலமைவு ஆசிரியர்களின் செயற்பாடுகள், போதிய நூல்கள் மற்றும் இலத்திரனியல் வளங்கள் போதுமாகக்கிடைக்காமை மற்றும் மாணவர்களின் ஆர்வமின்மை என்பன தடைகளை ஏற்படுத்துவதாக இனங்காணப்படுகின்றன.

**6. பரிந்துரைகள்**

மேற்கொள்ளப்பட்ட இந்த ஆய்வின்பிரகாரம், மாணவர்களுக்கான தகவல் அறிவுத்திறன் பயிற்சிகளை வழங்குதல், மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் ஆசிரிய நூலகர்களுக்கும் போதுமான முகாமைத்துவ ஒத்துழைப்புக்களை பாடசாலை முகாமைத்துவம் வழங்க வேண்டும். பாடசாலை சூழலமைவு பொருத்தமான வகையில் மாற்றியமைத்தல், மாணவர்களுக்கு தேவையான இற்றைப்படுத்தப்பட்ட இலத்திரனியல் மாற்று அச்சுவளங்களை பெற்றக் கொடுப்பதற்கு உதவி செய்யவேண்டும் போன்ற பரிந்துரைகள் முன்வைக்கப்படுகின்றன. அத்துடன் இவ்வாய்வானது தெல்லிப்பளைக் கல்விக்கோட்டத்திற்குட்பட்ட 1AB பாடசாலைகளில் மட்டும் மேற்கொள்ளப்பட்டதுடன் இது எனிவரும் காலங்களில் ஏனையபிரதேசங்களிலும் மேற்கொள்ளவேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

**உசாத்துணை நூல்கள்**

Ajiboye, J. O., & Tella, A. (2007). University Undergraduate Students' Information Seeking Behaviour: Implications for Quality in Higher Education in Africa. *Turkish Online Journal of Educational Technology-TOJET*, *6*(1), 40-52.

Caritas Sri Lanka. (2024), *Right to Education for Children of the Plantation Community in Sri Lnaka: Issues, Challenges and Future Directions*. Caritas Sri Laka, Colombo.

Chanlin,L.(2003). "*ICT Integration in Instructional Practices' Integration model and practice"* Journal of Instru ctional Psychology, 30(3), 228-233.

Colombo Children's Book Society (1981–2005). *Children's book day, reading clubs, literacy campaigns*.

Jayasuriya, W. R. (1979). *Education in Ceylon before and after independence*. Colombo: Ministry of Education.

Julien,H. & Genuis, S. K (2011). "Librarians' Experiences of the Teaching Role: A National survey of Librarians." *Library & Information Science Reserch*,33(2),103-111.

Ketheeswaren, S. (2024). Socio-Economic Impediments in School Libraries: A Focus on 'Thenmarachchi', Sri Lanka. *School Libraries Worldwide, 29(2)*, 1–18.

Kumar,P.S.G& Amudhavalli,A.(2007)."Information Literacy among school students." IASLIC Bulletin, 52(3),135-143.

Kulthanu, C,C.(2004) Seeking meaning: A Process Approach to Library and Information Services, Librais unlimited.

Lance, K.C,& Loertscher, D.V.(2005). Powering Achievement: School Library media

programs make a difference. Hi will oue Research and Publishing.

Lonsdale, M.(2003). Impact of school Liraries on student Achivement: A Review of the research. Australian Councilor Educational Research.

McNicol,S. (2005) The Role of Libraries in Addressing the information needs of Young people with mental healthissues" Library Review, 54(8),444-453.

Ministry of Education. (1984). *Handbook on School Libraries*. Colombo: Ministry of Education.

Ministry of Education. (1997). *General education reforms: Proposals for a national policy*. Colombo: Ministry of Education.

Ministry of Education. (2020). *School Library Development Report*. Colombo: Planning Division.

Nadarajah,V,& Sivatharsan, V, 2016. 'Challenges in Developing Rural School Libraries in Sri Lanka: Jaffna Education journal, 8(1), 55-67.

National Institute of Education. (1999). *School Library Resource Centre Manual*. Maharagama: NIE.

National Institute of Education. (2014). *National Policy on School Libraries in Sri Lanka*. Maharagama: NIE.

NILIS / University of Colombo (1999). *Establishment and training role under GEP 2*.

Neuman, S.B, & Celano, D. (2001), "Access to print in Low- income and middle income communities? An Ecological study of fourNeighborhoods," Reading Research Quarterly, 36(1), 8-26.

Nirainthini,T., & Shanmugathasan, M. (2023). A study on the utilization of Library Resource Cenres by G.C.E A/L STUDENTS IN Sandilipay Division. Sri Lanka Library Review, 37(1), 45-60.

Perera, P. G. (1990). Library development in Sri Lanka: An overview. *Sri Lanka Library Review*, 4(1), 15–22.

Perera, K. D. (1991). *Development of Libraries in Sri Lanka during the colonial period*. Journal of the Sri Lankan Library Association, 23(1), 15-28.

Perera, P. (2010). 'School Libraries on Student Achivement: A Review of the Reserch. Australian councilor Educational Research.

Pera, D.& Ranganathan,V. (2013) " School Library Environment and Its Impact on Learning: A Sri Lankan Perspective. South Asian Journal of Library and Information Science, 4(2), 45-53.

Pera, D.& Ranganathan,V. (2013) Learing Environments in school Libraries of Northern Province: Infrastructure and Accessibility Gaps. Sri Lanka Journal of Educational Research, 8(2), 51-67.

ResearchGate (Promotion of reading habit project) (2001–05). *BOBLEP and GEP 2 book flood initiatives*.

Room to Read Sri Lanka. (2016). *Annual Report*. Colombo: Room to Read.

Siriwardena, R. (1978). Sri Lanka in the modern Age? A history of Contested Identities. Colombo: sarvodaya Publications.

Sri Lanka Library Services Board (1989). *School library standards & voluntary building project*.

Ugah, A. D. (2008). Availability and accessibility of information sources and the use of library services at Michael Okpara university of agriculture. *Library Philosophy & Practice*

UNESCO. (1986). *Report on School Library Development in Asia*. Paris: UNESCO.

UNESCO. (2002). *Information for All: Sri Lanka Country Report*.

UNESCO(2020). Golbal Education Monitoring Report? Inclusion and Education- All means All, Paris: UNESCO.

Wickramanayake, L. (2016). Where to from here? Current status of school libraries in Sri Lanka: A survey. *New Library World, 117*(3/4), 214–228.

Williams, D,& Wavell, C.(2007) " *Secondary Students' use of ICT in the scool Library*" Journal of Librarianship and Information Science, 39(4),199-208.

W., S., & Zainab, A. N. (2002). An exploratory study of collection development of selected school resource centres in Sri Lanka. *Malaysian Journal of Library and Information Science, 7*(1), 1–12

Yapa, G. (1998). School libraries in Sri Lanka: a state-of-the-art report. *School Libraries Worldwide*, *4*(2), 1-14.